# வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

## கணக்கீடு

**தரம் - 12**

பகுதி - I

1. கணக்கீடு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் மிகச்சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   A - கணக்கீட்டு எண்ணக்கருக்கள், சட்டதிட்டங்கள், மரபுகள், கணக்கீட்டு நியமங்கள் என்பன நிதிக்கணக்கீட்டில் பயன்படுத்தப்படுகிறது.
   B - கணக்கீட்டின் பிரதான நோக்கம் அக்கறையுடைய தரப்பினருக்கு தீர்மானமெடுத்தலுக்குத் தேவையான பயனுள்ள தகவல்களை வழங்குதல்.
   C - கணக்கீட்டு அலகு என்பது கணக்கீட்டை மேற்கொள்ளும் தனிநபர் நிறுவனம் அல்லது அரசு ஆகும்.

   1) A , B மட்டும் 2) A , B , C ஆகும் 3) B , C ஆகும் 4) A , C ஆகும் 5) A மாத்திரம்

2. கணக்கீட்டுச் செயன்முறையில் காணப்படும் பின்வரும் நடவடிக்கைகளின் சரியான ஒழுங்குமுறையைத் தருக.
   A - பரீட்சை மீதி தயாரித்தல்
   B - நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல்
   C - பொதுப்பேரேட்டில் பதிவுகளைப் பதிதல்
   D - மூல ஏடுகளில் பதிதல்
   E - மூல ஆவணங்கள் தயாரிக்கப்படல்

   1) AEBCB 2) ABCDE 3) EDCAB 4) DCABE 5) BCDEA

3. கொடுக்கல் வாங்கலுக்குரிய இரட்டைப் பதிவைச் சரியாகக் காட்டியுள்ள கூற்றைக் காட்டுக.

| | | |
|---|---|---|
| 1) காசுக்குப் பொருட்கொள்வனவு ரூ.30,000 | - | கொள்வனவுக் க/கு வரவு<br>காசுக்கட்டுப்பாட்டுக் க/கு செலவு |
| 2) கடனுக்குப் பொருட்கொள்வனவு ரூ.4000 | - | இருப்புக் க/கு வரவு<br>கடன்கொடுத்தோன் கட்டுப்பாட்டுக்க/கு செலவு |
| 3) உடன்காசு விற்பனை ரூ.40000 | - | விற்பனைக் க/கு வரவு<br>இருப்புக் க/கு செலவு |
| 4) கடன் விற்பனை ரூ.50000 | - | விற்பனைக் க/கு வரவு<br>கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் க/கு செலவு |
| 5) தொலைபேசிக் கட்டணப்பட்டியல் | - | தொலைபேசிக் கட்டணக்க/கு வரவு<br>காசுக் கட்டுப்பாட்டுக் க/கு செலவு |

   1) 1 , 2 சரி 2) 1 மட்டும் சரி 3) 1, 2 , 4 சரி 4) 3 மட்டும்சரி 5) 5 மட்டும்சரி

4. வணிக நிறுவனமொன்று ரூ.50000 கொள்விலையான இருப்புக்கள் ரூ.80000 இற்கு கடனுக்கு விற்பனை செய்தது. இவற்றுள் ரூ.12000 விற்பனைப் பெறுமதியான பொருட்களை வருமதியாளர் திருப்பி அனுப்பியுள்ளார். மேற்தரப்பட்ட கொடுக்கல் வாங்கலினால் கணக்கீட்டுச் சமன்பாட்டில் மாறிகள் மீது ஏற்பட்ட தேறிய விளைவில் சரியானது.
   சொத்துக்கள் = பொறுப்புக்கள் + உரிமை

   1) + 18000 = .................... + 18000 2) + 25500 = ............... + 25500
   3) + 30000 = ................... + 12000 4) + 18000 = - 12000 + 30000
   5) + 68000 = + 50000 + 18000

5. விற்பனைக் கிரயத்தை ஒரு செலவினமாகவும் வருட முடிவில் உள்ள சரக்கிருப்பை சொத்தொன்றாகவும் மிகச் சிறப்பாக இனங்காணப் பயன்படுத்தப்படும் எண்ணக்கரு எது?
   1) தேறல்  2) இணைதல்  3) வரலாற்றுக்கிரயம்
   4) பாதுகாப்பு  5) அலகுசார்

6. நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு ஏற்பாட்டினைச் செய்வதற்கு அடிப்படையாக அமையும் கணக்கீட்டு எண்ணக்கரு.
   1) மாறாத்தன்மை  2) முக்கியத்துவத்தன்மை  3) வரலாற்றுக்கிரயம்
   4) முன்னெச்சரிக்கை  5) தொடர்ந்து செல்

7. "கடன் விற்பனையை பொறுத்த வரையில் காசு கிடைக்கப் பெறாவிட்டாலும் கூடப் பொருட்களின் அனுகூலங்களும் இடர்களும் கொள்வனவாளருக்கு உரிமை மாற்றப்பட்டிருக்கும். அதனால் இது வருமானமொன்றாகக் கருதப்படும்." மேற்கூறிய கூற்றுக்களுக்கு ஆதாரமான எண்ணக்கரு.
   1) அட்டுறு எண்ணக்கரு
   2) பொருண்மை எண்ணக்கரு
   3) தேறல் எண்ணக்கரு
   4) இரட்டை விளைவு எண்ணக்கரு
   5) கால அளவீட்டு எண்ணக்கரு

8. பின்வரும் கூற்று / கூற்றுக்களில் எது சரியானவை.

A - உரிமை கோட்பாடானது கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் சுயாதீனமாக பதிவு செய்யப் பணிக்கிறது.

B - வரலாற்றுக்கிரய எண்ணக்கருவினால் ஏடுகளில் மிகவும் நம்பகரமான பெறுமதியினைக் காட்டும் பொருட்டு சொத்துக்களினை அவற்றின் கிரயத்தில் பெறுமானமிடுகிறது.

C - நீண்டகாலப் பாவனை கொண்ட பஞ்சர் நிதிக்கூற்றுக்களில் செலவாக காட்டுவது தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கருவிற்கு அமைவாக ஆகும்.

   1) ABC  2) AB  3) BC  4) AC  5) B

9. பின்வரும் கூற்றுக்களில் எவை சரியானவை / சரியானது.

A - ரூபா 750,000க்கு வாங்கிய இயந்திரம் 2020.03.31 நிதி அறிக்கையில் 900,000 ஆக காட்டப்பட்டமை. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு மீறப்பட்டமையாகும்.

B - குத்தகையாளிடமிருந்து பெறப்பட்ட குத்தகையாதனம் நிறுவனத்தின் நிதி நிலமை கூற்றில் சொத்தாக காட்டுவதற்கு அடிப்படையாக அமைந்த எண்ணக்கரு பொருண்மை எண்ணக் கருவாகும்.

C - விற்பனை செய்யப்பட்ட பொருள்களுக்கு வழங்கப்படும் உத்தரவாதத்திற்கான ஏற்பாட்டினை செய்தல். பாதுகாப்பு எண்ணக்கருவுக்கு அமைவானது.

   1) AC  2) AB  3) BC  4) A  5) ABC

❖ **10, 11 ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.**

"சிந்து" என்பவர் ரூபா 200000 பட்டியல் விலை கொண்ட பொருட்களை 10% வியாபாரக் கழிவினை அனுமதித்த பின்னர் "பைரவி" என்பவருக்கு 15.04.2020 இல் கடனுக்கு விற்பனை செய்துள்ளார். இப் பொருட்களின் கிரயமானது ரூபா 120000 ஆக இருந்தது. ரூபா 60000 விற்பனைப் பெறுமதியுடைய பொருட்கள் (கிரயம் 40000) ஆனவை 20.04.2020 இல் பைரவியால் திருப்பியனுப்பப்பட்டன பைரவி தான் செலுத்த வேண்டிய மீதியினை 30.04.2020 இல் 5% காசுக் கழிவினை பெற்ற பின்னர் கொடுத்துத் தீர்த்தார்.

10. சிந்து வியாபாரத்தில் இக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்கு பயன்படுத்திய மூல ஆவணங்களின் ஒழுங்கு வரிசை எது?
   1) விலைப்பட்டியல் , நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு , பற்றுச்சீட்டு
   2) விலைப்பட்டியல் , வரவுத்தாள் , பற்றுச்சீட்டு
   3) விலைப்பட்டியல் , செலவுத்தாள் , பற்றுச்சீட்டு
   4) விலைப்பட்டியல் , செலவுத்தாள் , நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு
   5) விலைப்பட்டியல் , வரவுத்தாள் , நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு

11. பைரவி வியாபாரத்தில் இக் கொடுக்கல் வாங்கலைப் பதிவதற்குப் பயன்படுத்திய மூலப் பதிவேடுகளின் ஒழுங்கு வரிசை.
   1) கொள்வனவு நாளேடு - கொள்வனவு திரும்பல் நாளேடு, பொதுநாட்குறிப்பேடு
   2) கொள்வனவு நாளேடு - கொள்வனவு நாளேடு , காசு கொடுப்பனவு நாளேடு
   3) கொள்வனவு நாளேடு - பொது நாட்குறிப்பேடு , பொதுநாட்குறிப்பேடு
   4) கொள்வனவு நாளேடு - கொள்வனவு திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு
   5) கொள்வனவு நாளேடு - பொது நாட்குறிப்பேடு, காசு கொடுப்பனவு நாளேடு

12. மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக "சிந்து" நிறுவனத்தின் 30.04.2020 இல் முடிவடைந்த மாதத்திற்கான தேறிய இலாபத்தில் ஏற்பட தேறிய அதிகரிப்பு.
   1) ரூ.14000  2) ரூ.13000  3) ரூ.40000  4) ரூ.53000  5) ரூ.34000

13. நிறுவனமொன்று 2020.05.01 இல் ரூபா 100000 வங்கியில் வைப்புசெய்து நடைமுறை கணக்கினை ஆரம்பித்தது. வணிகத்தின் 2020.05.31 இல் வங்கி கூற்றுமீதி ரூபா 30000 செலவு மீதி காணப்பட்டது. இருமீதிகளும் வேறுபட்டதற்கான காரணங்கள் வருமாறு.

| | |
|---|---|
| காசுக் கணக்கில் சீராக்கப்படாத பங்குலாபம் | ரூ.5000 |
| வைப்பு செய்து மறுத்த காசோலை | ரூ.8000 |
| மாற்றப்படாத காசோலை | ரூ.10000 |

   2020.05.31 இல் சீராக்கிய காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதியாக அமைவது.

   1) ரூ.20000  2) ரூ.90000  3) ரூ.17000  4) ரூ.97000  5) ரூ.27000

14. பின்வரும் கூற்றுக்களில் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பில் பிழையான கூற்று எது?
   1) விற்பனை நாளேட்டின் மொத்ததொகை கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கில் வரவு வைக்கப்படும்.
   2) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு பொதுப்பேரேட்டில் காணப்படும்.
   3) கடந்தகாலம் பதிவழித்த அறவிட முடியாக்கடன் மீளப்பெறப்படும் போது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியினை பாதிக்காது.
   4) எல்லாக் கடன் விற்பனைகளும் கட்டுப்பாட்டுக்கணக்கில் பதியப்படும்.
   5) விற்பனை நாளேட்டில் உள்ள வாடிக்கையாளர் கணக்குகள் துணைப்பேரேட்டில் பதியப்படும்.

15. வரையறுத்த சுதா வணிகத்தில் 2019.04.01இல் 6 நிரந்தர ஊழியர்கள் காணப்படுகின்றனர். இவர்களுக்கு மாதாந்தம் ரூபா 9000 வீதம் நிறுவனம் அவர்கள் கணக்கில் வங்கியில் வைப்புச் செய்கிறது. ஊழியர் சேமலாப (EPF) நிதியத்திற்கு தொழிலாளர் 10% , தொழில் தருநர் 15% பங்களிப்பு செய்கின்றனர். 31.03.2020 இல் வருமானக் கூற்றில் சம்பளமாகவும், ஊழியர் சேமலாப நிதிச் செலவாகவும் காட்ட வேண்டிய தொகை?

   1) ரூ.100000 , 15000  2) ரூ.600000 , ரூ.15000  3) ரூ.720000, 15000
   4) ரூ.60000 , 90000  5) ரூ.720000 , 108000

16. நிதிக்கூற்றுக்களின் எண்ணக்கரு சட்டத்திற்கமைய நிதிக்கூற்றுக்களின் அடிப்படை எடுகோள் யாது?
   1) அட்டுறு , தொடர்ந்து இயங்குதல்
   2) தொடர்ந்து இயங்குதல்
   3) அட்டுறு
   4) அலகுசார், தொடர்ந்து இயங்குதல்
   5) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்

❖ **17,18 ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.**

வணிகம் ஒன்று தொடர்பான பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 17 , 18 ம் வினாக்களுக்கு விடைதருக.

I) மின்கட்டணம்

| | | |
|---|---|---|
| 31.03.2020 இல் - முடிவடைந்த வருடத்தில் செலுத்தியது | | ரூ.50000 |
| அட்டுறு மின்கட்டணம் | 1.4.2019 இல் | ரூ.5000 |
| | 31.3.2020 இல் | ரூ.8000 |

II) வாடகை வருமானம்
1.10.2019 இல் வாடகைக்கு விடப்பட்ட கட்டடம் ஒன்றில் இருந்து ரூபா 120000 வருட வாடகையாக பெறப்பட்டது.

17. 31.03.2020 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமானக் கூற்றில் பதியப்பட வேண்டிய மின்கட்டணம், வாடகை வருமானம் முறையே.
   1) ரூ.53000 , 60000    2) ரூ.47000 , 60000    5) ரூ.53000 , 120000
   4) ரூ.63000 , 60000    5) ரூ.63000 , 120000

18. 31.3.2020 நிதிநிலமைக் கூற்றில் இனங் காணப்படவேண்டிய மொத்தப் பொறுப்பு எவ்வளவு?
   1) ரூ.65000    2) ரூ.128000    3) ரூ.73000    4) ரூ.8000    5) ரூ.68000

19. வணிகமொன்றின் புத்தகங்களில் இருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | 31.3.2020<br>ரூ.(000) | 31.3.2019<br>ரூ.(000) |
|---|---|---|
| வியாபார வருமதிகள் | 2400 | 2000 |
| ஐயக்கடன்களுக்கான ஒதுக்கீடு | 240 | 200 |

மேலும் 31.3.2020 இல் முடிவடைந்த வருடத்தில் அறவிடமுடியாக் கடன்களாக ரூ.120000 பதிவழிக்கப்பட்டுள்ளதுடன் பின்வருவனவற்றுள் சரியானது எது?

| | 31.3.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன் செலவு (ரூ"000") இல் | 31.3.2020இல் வியாபார வருமதிகளின் கொண்டு செல் மீதி (ரூ"000") இல் |
|---|---|---|
| 1) | 160 | 2160 |
| 2) | 120 | 2160 |
| 3) | 160 | 2040 |
| 4) | 360 | 2160 |
| 5) | 360 | 2120 |

20. நிறுவனமொன்றின் 31.3.2020 இல் ஏற்பட்ட தீயினால் அதன் இருப்புகளில் 50% ஆனவை அழிவடைந்தன. 31.3.2020 இல் முடிவடைந்த வருடத்தில் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | (ரூபா 000) |
|---|---|
| 1.4.2019 இல் உள்ளவாறு இருப்பு கிரயத்தில் | 1500 |
| கொள்வனவுகள் | 3500 |
| கொள்வனவு திரும்பல் | 500 |
| விற்பனைகள் | 4800 |
| விற்பனைச் செலவுகள் | 600 |

இந்நிறுவனம் கிரயத்தில் 20% இலாபம் வைத்து பொருட்களை விற்பனை செய்கிறது. காப்புறுதிக் கம்பனியானது 31.3.2020 இல் உள்ளவாறான இருப்புக்களில் அழிவடைந்த இருப்புக்களின் கிரயத்தில் 80% இனை செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளது.
31.3.2020 இல் அழிவடைந்த இருப்புக்களின் கிரயம் 31.3.2020 இல் முடிவடைந்த வருடத்திற்காக இனங்காணப்பட்ட இருப்பு நட்டமும் யாவை?

| அழிவடைந்த இருப்புக்களின் கிரயம் (ரூ.000) | இருப்பு நட்டம் (ரூ.000) |
|---|---|
| 1) 250 | 200 |
| 2) 250 | 50 |
| 3) 330 | 66 |
| 4) 500 | 100 |
| 5) 500 | 400 |

21) பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப்பொருள் ஒன்றுடன் தொடர்பானவை.

| | ரூபா"000"இல் |
|---|---|
| பயன்படுத்திய நேர் மூலப்பொருட்கள் | 480 |
| நேர்கூலிகள் | ? |
| உற்பத்தி மேற்தலைகள் | ? |
| மொத்த உற்பத்தி கிரயம் | 1200 |

நேர்கூலிக் கிரயத்தின் 80% இனை உற்பத்தி மேற்தலைகளாக உறிஞ்சுதல், கம்பனியின் கொள்கையாகும். மொத்த உற்பத்திக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நேர்க்கூலிக்கிரயம் யாது?
1) ரூ.400000 2) ரூ.240000 3) ரூ.144000 4) ரூ.560000 5) ரூ.720000

22) இலாப நோக்கற்ற அமைப்பான முழுநிலா சங்கத்தின் 2018.03.31 இல் உள்ளவாறான ஐந்தொகை

| | ரூபா |
|---|---|
| வாசிகசாலைக் கட்டடம் | 75000 |
| நடைமுறைச் சொத்து | 140000 |
| | 215000 |
| திரண்ட நிதி | 125000 |
| வாசிகசாலை கட்டட நிதியம் | 75000 |
| நடைமுறைப் பொறுப்பு | 15000 |
| உரிமையும் பொறுப்பும் | 215000 |

2018.04.05. ஆம் திகதியன்று வாசிகசாலைக் கட்டட நிர்மாணத்திற்காக வாசிகசாலைக் கட்ட நிதியிலிருந்து ரூ.25000 பயன்படுத்தப்பட்டது. 2018.04.05 ஆந் திகதி வரை வேறு எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் நடைபெறவில்லையெனில், மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்கலைச்

சரியாகப் பதிவு செய்யப்பட்ட பின்னுள்ள நிதி நிலைமையை எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

| திரண்ட நிதி | + வாசிகசாலை கட்டட நிதி | + நடைமுறை பொறுப்பு | = வாசிகசாலை கட்டடம் | + நடைமுறைச்சொத்து சொத்து |
|---|---|---|---|---|
| 1) ரூ.150000 | + ரூ.50000 | + ரூ.15000 | = ரூ.100000 | + ரூ.115000 |
| 2) ரூ.125000 | + ரூ.75000 | + ரூ.15000 | = ரூ.100000 | + ரூ.115000 |
| 3) ரூ.150000 | + ரூ.50000 | + ரூ.15000 | = ரூ.75000 | + ரூ.140000 |
| 4) ரூ.150000 | + ரூ.75000 | + ரூ.15000 | = ரூ.100000 | + ரூ.140000 |
| 5) ரூ.125000 | + ரூ.100000 | + ரூ.15000 | = ரூ.100000 | + ரூ.140000 |

23) அமல் வியாபாரத்தின் 31 மார்ச் 2018 இல் முடிவடைந்த ஆண்டு தொடர்பான தகவல்கள் வருமாறு:

| | ரூபா "000" |
|---|---|
| தொழிற்படு மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு (காசு மீதி தவிர) | 700 |
| காசு மீதியில் ஏற்பட்ட அதிகரிப்பு | 1000 |
| வங்கிக்கடன் பெற்றது | 900 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில் நிறுவனத்தின் 31.03.2018இல் முடிவுற்ற ஆண்டிற்கான தேறிய இலாபம் யாது?

1) ரூ. 1500 000 2) ரூ.800 000 3) ரூ.1200 000
4) ரூ. 700 000 5) ரூ.2600 000

24) 31.03.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இருப்பு மதிப்பீடு செய்ய முடியாது போனதால் 20.04.2018 இல் அன்று இருப்பு ரூ.44000 என மதிப்பிடப்பட்டது. 01.04.2018 - 20.04.2018 வரை இடம்பெற்ற விற்பனைகள் ரூ.20000, கொள்வனவு திரும்பல் ரூ.5000, கொள்வனவுகள் ரூ.17400, விற்பனை திரும்பல்கள் ரூ.4000, விற்பனைகள் அனைத்தும் விற்பனை விலையில் 10% இலாபம் சேர்த்து விற்பனை செய்யப்பட்டுள்ளன. 31.03.2018 இல் இருந்த இருப்பின் பெறுமதி யாது?

1) ரூ.46000 2) ரூ.47600 3) ரூ.40400 4) ரூ.45600 5) ரூ.42000

❖ **25, 26, 27 ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.**
பங்குடமை ஒன்றில் முரளி, சுருளி, சுதன் ஆகியோர் பங்குடமை ஒன்றின் இலாப நட்டங்களை 5 : 3 : 2 என்றவாறு பகிரும் பங்காளர்கள் ஆவார். இப் பங்குடமையில் இருந்து 1.4.2019 இல் சுதன் என்பவர் இளைப்பாறினார். நன்மதிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்படாது பங்காளர் மூலதனக் கணக்கின் ஊடாக சீராக்கப்பட்டது. பங்காளர் மூலதனக் கணக்கு ஆண்டுக்கு 10% வட்டி பெறுவதற்கு உரித்துடையவர்கள். இளைப்பாறிய பங்காளனுக்கு செலுத்த வேண்டிய தொகை 10% கடன் கணக்கு மாற்றப்பட்டது.

31.3.2020 இல் முடிவடைந்த தினத்தில் உள்ள மீதிகள்

| | மொத்த உரிமை | மூலதனக் கணக்கு (ரூபா"000"இல்) |
|---|---|---|
| முரளி | 1610 | 1100 |
| சுருளி | 1190 | 900 |

01.04.2019 இல் பங்காளர் நடைமுறைக்கணக்கு மீதி (ரூபா"000"இல்)

| | | |
|---|---|---|
| முரளி | 400 | (செலவு) |
| சுருளி | 200 | (செலவு) |
| சுதன் | 100 | (வரவு) |

*31.3.2020 சுதன் கடன் கணக்கு ரூ.900 000  01.04.2019 இல் சுதன் மூலதனக் கணக்கு ரூ.800 000 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பற்றுக்கள் முரளி, சுருளி முறையே ரூ.300 000, ரூ.200 000.*

25) பங்குடமையின் மொத்த நன்மதிப்பு யாது?
1) ரூ.500 000  2) ரூ.1000 000  3) ரூ.200 000  4) ரூ.2000 000  5) ரூ.100 000

26) 31.3.2020 இல் முடிவடைந்த நியாண்டுக்கான தேறிய இலாபம்?
1) ரூ.200 000  2) ரூ.500 000  3) ரூ.700 000  4) ரூ.400 000  5) ரூ.300 000

27) 1.4.2019 இல் பங்குடமையின் மொத்த உரிமை யாது?
1) ரூ.2 400 000  2) ரூ.2 800 000  3) ரூ.4 000 000  4) ரூ.3 000 000  5) ரூ.3 500 000

28) பின்வரும் கூற்றுக்களில் எது பங்குடமை ஒன்று தொடர்பில் சரியானவை?

A - பங்குடமை ஒன்றின் பங்காளர்களின் உச்ச எண்ணிக்கை 20 என 2007 ஆண்டு (07) இலக்க கம்பனிச் சட்டமானது கட்டுப்படுத்துகின்றது.
B - இலாபப் பகிர்வு வீதம் மாற்றமடையும் போது பங்குடமை ஒன்றின் நன்மதிப்பு மதிப்பிடப்படும்.
C - 1890 ஆம் ஆண்டின் பங்குடமைச் சட்டத்தின் 42வது பிரிவிற்கு அமைய பங்காளர் கடனுக்கு 5% வட்டி வழங்கப்படுதல் வேண்டும்.
D - 1890 ஆம் ஆண்டின் பங்குடமைச் சட்டத்தின் 24 ஆவது பிரிவிற்கு அமைய பங்காளர் மூலதன மீதிக்கு 5% வட்டியானது செலுத்தப்பட வேண்டும்.
E - "கடன் வட்டியானது" பங்குடமையின் இலாபப் பகிர்வின் ஒரு வழியாக பயன்படுத்த முடியும்.

1) ABD  2) ABC  3) CDE  4) ABE  5) A, B மட்டும்

❖ **29 , 30 ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.**
2020.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான P , Q , R பங்குடமை வணிகத்தின் தகவல்களில் சில வருமாறு.

A - Q எனும் பங்காளரினுடைய சம்பளம் மாதாந்தம் ரூ.2000/=
B - மேற்குறிப்பிட்ட சம்பளத்தில் ரூ.12000/= குறித்த வருடத்தில் செலுத்தப்பட்டுள்ளது.
C - P , Q , R என்போருடையே பகிர்ந்து கொள்ளப்பட்ட இறுதிப் பங்குலாபம் முறையே ரூ.40000/=, ரூ.30000/= , ரூ.20000/= ஆகும்.
D - R செலுத்த வேண்டிய கடனுக்கான வட்டி ரூ.3000/= இற்கு எவ்வித பதிவுகளும் செய்யப்படவில்லை.
E - P , R என்போர்களின் பொருள் பற்று முறையே ரூபா 3000/=, ரூபா 2000/= ஆக இருந்ததுடன் இது தொடர்பில் எவ்விதப் பதிவுகளும் செய்யப்படவில்லை.

29) மேற்காட்டிய உருப்படிகளில் எவ்வுருப்படிகள் பங்காளர் இலாப நட்டப் பகிர்வாகக் கருதப்படும்.
1) ABCDE  2) BCD  3) ADE  4) AC  5) AB

30) 2020.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கானன சரியான இலாபம்.
1) ரூ.90000  2) ரூ.102000  3) ரூ.106000  4) ரூ.114000  5) ரூ.116000

31) பின்வரும் கூற்றுக்கள் நிதிக்கணக்கீட்டுடன் தொடர்புடையவையாயின் "சரி" எனவும் தொடர்பற்றவையாயின் "பிழை" எனவும் குறிப்பிடவும்.

A) இது நிறுவன முகாமையாளர்கள் தீர்மானம் எடுப்பதற்கான தகவல்களை வழங்குகின்றது. (  )

B) இது வெளியக மற்றும் உள்ளகத் தரப்பினர்களது தேவைகளுக்கு பயன்படுத்தக்கூடியது. (  )

C) இது வணிகம் தொடர்பான கடந்தகால எதிர்காலத் தகவல்களை வழங்குகின்றது. (     )

D) இது கணக்கீட்டு நியமங்கள் சட்டங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்படுகின்றது. (     )

32) நிதிக் கணக்கீட்டையும் முகாமைக் கணக்கீட்டையும் கீழ்த்தரப்பட்ட தலைப்புக்களுக்கேற்ப வேறுபடுத்துக.

| | **தலைப்பு** | **நிதிக்கணக்கு** | **முகாமைக்கணக்கு** |
|---|---|---|---|
| A | உள்ளடங்கும் தகவல்கள் | ____________ | ______________ |
| B | அறிக்கையிடும் காலம் | ____________ | ______________ |

33) வணிகமொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமை என்பவற்றில் ஏற்படும் தாக்கத்தை ‘‘குறையும்’’ ‘‘அதிகரிக்கும்’’ , ‘‘மாற்றமில்லை’’ என்றவாறு காட்டுக.

| | | **சொத்துக்கள்** | **பொறுப்புக்கள்** | **உரிமைகள்** |
|---|---|---|---|---|
| 1) | அட்டுறு காப்புறுதி கட்டணம் செலுத்துதல் | __________ | __________ | __________ |
| 2) | கடனுக்கான வட்டி செலுத்தியது. | __________ | __________ | __________ |
| 3) | சொந்த இயந்திரத்தை மூலதனமாக்கல் | __________ | __________ | __________ |
| 4) | சில்லறைக்காசு கட்டுநிதி மீள்நிரம்பல் | __________ | __________ | __________ |

34) கீழே தரப்பட்டுள்ள முதன்மை ஏடுகளுக்கு தேவையான மூல ஆவணங்களை குறிப்பிடுக.

| | **முதன்மை ஏடுகள்** | **மூல ஆவணம்** |
|---|---|---|
| 1) | கொள்வனவு நாட்குறிப்பேடு | ____________________ |
| 2) | கொள்வனவு திரும்பல் நாட்குறிப்பேடு | ____________________ |
| 3) | காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு | ____________________ |
| 4) | பொது நாட்குறிப்பேடு | ____________________ |

35) வியாபாரமொன்றின் சில்லறைக் காசாளரிடம் மாதத்தொடக்கத்தில் 10000 சில்லறைக்காசு முற்பணமாக கொடுக்கப்படுகிறது. மாத இறுதியில் இவர் ரூ.7500 மீள் நிரப்பு தொகையாகக் கேட்டுள்ளார். பின்வருவனவற்றை குறிப்பிடுக.

1) மாதத்திற்கான சில்லறைக்காசு செலவு ரூ. ______________________________

2) மீள் நிரப்பலுக்கான நாட்குறிப்பு பதிவு ______________________________

(விளம்பல் தேவையில்லை)

36) சொத்துக்களுக்கான கணக்கீட்டின் போது நிறுவனமொன்று வரலாற்றுக்கிரய எண்ணக் கருவிலிருந்து விலகிச் செல்லக்கூடிய இரண்டு சூழ்நிலைகளைக் குறிப்பிடுக.

1) ______________________________________________

2) ______________________________________________

37) பின்வரும் நிகழ்வுகளுக்குப் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக.

அ) இருப்பினை கிரயம் அல்லது தேறிய தேறத்தக்க பெறுமானம் என்பவற்றில் குறைவான பெறுமதியில் அறிக்கைப்படுத்தல்.

ஆ) உரிமையாளரது பற்றுக்களை அறிக்கைப்படுத்துதல்.

இ) முற்பணமாகப் பெற்ற வருமானங்களை இனங்காணல்.

ஈ) நிதி நிலைக்கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கிரயப் பெறுமதி காட்டப்பட்டிருத்தல்.

38) வரையறுத்த சாரங்கன் பொதுக்கம்பனியின் 31.3.2020 இல் பரீட்சை மீதியானது சமப்படவில்லை இவ் வேறுபாடானது தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. பரிசீலனை பின்வருவனவற்றை வெளிக்கொண்டு வந்தது.

A மின்சார செலவினங்களுக்காக செலுத்தப்பட்ட ரூ.200000/= ஆனது காசுக்கணக்கில் மாத்திரம் பதியப்பட்டுள்ளது.

B கொள்வனவு நாளேடானது ரூ.50000/= இனால் கூடுதலாக கூட்டப்பட்டது.

C கடன்பட்டோரிடமிருந்து பெற்ற ரூ.40000/= ஆனது கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் காசுக்கொடுப்பனவாக பதியப்பட்டிருந்தது.

D ரூ.40000/= விற்பனை விலைப்பட்டியலானது கடன்பட்டோர் பேரேட்டில் மாத்திரம் பதியப்பட்டுள்ளது.

மேலே தரப்பட்டுள்ள வழுக்களினால் பரீட்சை மீதியில் தோன்றியுள்ள தொங்கல்கணக்கு மீதி யாது?

39) நிறுவனமொன்று மேற்கொண்ட கடன் விற்பனைகள் தொடர்பான தகவல் வருமாறு மொத்தக்கடன் விற்பனைகள் ரூ.360000/= (பெறுமதி சேர்வரி உட்பட) பெறுமதிசேர் வரி 20% ஆகும். பின்வரும் கணக்குகளில் காட்டத்தக்க சரியான தொகைகளைக் கொண்ட தொகுதி

விற்பனை ________________ கடன்படுநர் ________________

பெறுமதி சேர்வரி கணக்கு ________________

❖ **40, 41 ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.**
1.4.2019 இல் ஆரம்பிக்கப்பட்ட "நிஷா" வணிகத்தின் 31.3.2020 முடிவடைந்த வருடத்தில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட தேறிய சம்பளம் ரூ.1080000 ஆகும். ஊழியர்களின் EPF பங்களிப்பு 10% உம் நிறுவன பங்களிப்பு 15% ம் மொத்த சம்பளத்தில் கணிப்பிடப்படுகிறது. எனினும் இவ் ஆண்டுக்கான இதற்கான சீராக்கம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

40) 31.3.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான ஊழியர்களின் EPF பங்களிப்பு , நிறுவன EPF பங்களிப்புச் சீராகங்களுக்கான இணைந்த இரட்டைப் பதிவு (தொகைகளுடன்)

________________ வரவு ________________

________________ வரவு ________________

________________ செலவு ________________

41) 31.3.2020 இல் முடிவடைந்த வருடத்தில் வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் EPF சீராக்கம் தொடர்பான கீழ்வரும் அடிப்படை சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம் யாது?

| | சொத்து | = | பொறுப்பு | + | உரிமை |
|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்ட சம்பளம் | ________ | | ________ | | ________ |
| ஊழியர் EPF | ________ | | ________ | | ________ |
| நிறுவன EPF | ________ | | ________ | | ________ |
| தேறிய தாக்கம் | ________ | = | ________ | + | ________ |

❖ **42, 43 ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.**

1.4.2019 இல் வியாபார வருமதிகள் ரூபா. 1800000 ஆக காணப்பட்டன.

பின்வரும் தகவல்கள் ''சிந்து'' வணிகத்தின் 31.3.2020 முடிவடைந்த வருடத்திற்குரியதாகும்.

| | ரூபா (000) |
|---|---|
| கடன்விற்பனை | 7200 |
| விற்பனைத் திரும்பல்கள் | 800 |
| வியாபார வருமதிகளுக்காக பெற்றகாசு | 5600 |
| பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக்கடன் | 400 |

நிறுவனமானது ஒவ்வொரு வருடமும் வருட முடிவில் உள்ள வியாபார வருமதியில் 10% ஐ ஐயக்கடன் ஒதுக்கம் செய்வதை வழமையாக கொண்டுள்ளது.

42) 31.3.2020 இல் உள்ளவாறான பின்வருவனவற்றை கணிப்பிடுக.

அ) வியாபார வருமதியாளர்கள் கட்டுப்பாட்டு கணக்கு மீதி (ரூ000 இல்)

________________________________________

ஆ) அறிக்கையிடப்பட்ட வியாபார வருமதியாளர்களின் கொண்டு செல் தொகை (ரூ000இல்)

________________________________________

43) 31.3.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான அறவிட முடியாக்கடன், ஐயக்கடன் ஆகியவற்றைப் பதிவதற்கான நாட்குறிப்பு பதிவுகள்.

| | **விபரம்** | **வரவு (ரூ.000)** | **செலவு (ரூ.000)** |
|---|---|---|---|
| அ) | ____________ | ______ | ______ |
| | ____________ | ______ | ______ |
| | (அறவிடமுடியாக்கடன் பதிவழிக்கப்படுதல்) | | |
| ஆ) | ____________ | ______ | ______ |
| | ____________ | ______ | ______ |
| | (ஐயக்கடனாக பதியப்படுதல்) | | |

44) பின்வருவன 1.4.2019 இல் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை சீருடைகளை உற்பத்தி செய்யும் சுதர்சினி வணிகத்தின் தகவல்களாகும்.

| **விபரம்** | **(ரூ.000)** |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவுகள் | 1000 |
| நேர்க்கூலிகள் | 400 |
| 31.3.2020 இல் மூலப்பொருள் இருப்பு | 200 |
| 31.3.2020 இல் நடைமுறை வேலை இருப்பு | 300 |
| உற்பத்தி மேந்தலைகள் | 900 |

31.3.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கு பின்வருவனவற்றை கணிப்பிடுக.

அ) மூலக்கிரயம் ______________________________

ஆ) உற்பத்திக்கிரயம் ______________________________

45) இலாப நோக்கற்ற நிறுவனமொன்றின் பிரதான வருமான மூலமாக ____________________ காணப்படுகின்றது.

46) நிறைவில் பதிவினை பேணும் நிறுவனங்கள் தமது இலாப நட்டங்களை கணிப்பிடுவதற்குப் பின்பற்றும் இரு முறைகளைக் குறிப்பிடுக.

________________________________________

________________________________________

❖ **47, 48 ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.**
A , B பங்குடமை வணிகத்தின் 31.3.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாப பகிர்வுக்கூற்று பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| தேறிய இலாபம் | | | 360000 |
| சம்பளம் | A | 90000 | |
| | B | 60000 | (150000) |
| மூலதனவட்டி | A | 60000 | |
| | B | 50000 | (110000) |
| இலாப்பங்கு | A | 60000 | |
| | B | 40000 | (100000) |

47) A பங்குடமை வணிகத்திற்கு வழங்கியிருந்த ரூபா 200000 தொடர்பில் செலுத்தப்படவேண்டிய வட்டி 20000 வருமானக்கூற்றில் செலவாகக் காட்டப்பட்டிருந்தது. பங்காளரிடையே பங்குடமை ஒப்பந்தமொன்று ஏற்படுத்தாது 1890ஆம் ஆண்டு பங்குடமை கட்டளை சட்டத்தின் 24ம் பிரிவின் படி பங்குடமை வணிகம் செயற்படுமாயின் 31.03.2020 முடிவடையும் வருடத்திற்கான B யின் இலாபப்பங்கு யாது?

______________________________________________

48) மேற்குறிப்பிட்ட பங்குடமையில் C என்பவர் 31.3.2020 சேர்த்துக்கொள்ளப்பட்டார். இதன்போது நன்மதிப்பு ரூபா 200000 ஆக மதிப்பிடப்பட்டது புதிய இலாப நட்ட வீதம் 4 : 3 : 3 ஆகும் நன்மதிப்பானது மூலதனக்கணக்கினூடாக சீராக்கப்பட்டது. நன்மதிப்பிற்கான நாட்குறிப்பு பதிவை தருக.

______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________

49) A , B பங்காளர்கள் இலாப நட்டங்களை 2 : 1 என்ற விகிதப்படி பகிர்ந்து பங்குடமையொன்றை இயக்கி வருகின்றனர். பங்குடமையின் நிதியாண்டு மார் 31 இல் முடிவடைகின்றது. 31.3.2020 இல் நடைமுறை கணக்கு மீதிகள் பின்வருமாறு இருந்தது.

| | | |
|---|---|---|
| பங்காளர் | A | ரூ.24000 செலவு மீதி |
| பங்காளர் | B | ரூ.12000 வரவு மீதி |

31.3.2020 முடிவடைந்த ஆண்டில் பின்வரும் வழுக்கள் நிறுவன ஏடுகளில் கண்டுபிடிக்கப்பட்டன.

1. பங்காளர் A பற்றியுள்ள ரூ.9000 கிரயமான பண்டங்கள் தொடர்பாக எப்பதிவும் இடம்பெறவில்லை.
2. பங்காளர் B பங்குடமையின் கட்டடவாடகை 18000 ரூபாவை தனது பணத்திலிருந்து செலுத்தியிருந்தார். இது முழுமையாக பதிவுக்கு உட்படுத்தப்படவில்லை.

தவறுகள் திருத்திய பின்னர் A, B என்போரின் நடைமுறைகணக்கு மீதிகள் எவ்வாறு இருக்கும்.

______________________________________________
______________________________________________

50) மூலதனக்கணக்கு, நடைமுறைகணக்கு இரண்டுக்கும் இடையில் காணப்படும் ஒற்றுமை ஒன்றும் வேற்றுமை ஒன்றும் தருக.

1. ______________________________________________
2. ______________________________________________